Re gistered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண்:

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது மாசி 3 ஆம் நாள் ரம்ழான் 30 15-2-64 சனிக்கிழமை இதழ் 5

உங்களுடைய அன்றாட பாவனைக்கு
திறட்
கே. ஆர். லிங்கன்ஸ்
காப்பித்தூள், மிளகாய்த்தூள்
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றது
யாழ்ப்பாணம் பஜார் ஏஜண்ட்
எம். பரராசசிங்கம்
சேலம் பீடி ஏஜண்ட்ஸ்,
யாழ்ப்பாணம்.

# மறியல் இயக்கம் மீண்டும் ஒத்திவைப்பு

## கூட்டங்கள்யாவும் ரத்துச்செய்யப்பட்டன

### புதிய போராட்ட திகதி பின்பு அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம், சனி

தமிழ் பேசும் பகுதிகளில் உத்தியோகமொழியான சிங்களத்தைத் திணிப்பதை எதிர்த்து தமிழரசுக்கட்சி எடுக்கும் நேரடிநடவடிக்கையின் ஓர் அம்சமாக இம்மாதம் 17-ந் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பானத்தில் ஆரம்பமாகவிருந்த மறியல் இயக்கம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மறியல் இயக்கம் சம்பந்தமாக பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக இன்று யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டமும் ரத்துச் செய்யப்பட்டது. தொகுதிவாரியாக ஒலிபெருக்கி இணைத்த மோட்டார் கார்களில் எம். பி.க்கள் தலைமையில் மூன்று தினங்கள் நடைபெறவிருந்த 'சூருவளி'ப் பிரசாரத்திட்டமும் கைவிடப்பட்டது.

சமீபத்தில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளின் விளைவாக நேரடி நடவடிக்கையை தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைக் குழு பின்போடத் தீர்மானித்துள்ளது என்றும், மீண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அறிவித்தார்.

## சீனப் பிரதமரின் இலங்கை சுற்றுப்பிரயாணம்

### விரிவான ஏற்பாடுகள் தயாராகின்றன

கொழும்பு, வெள்ளி

சீனப்பிரதமர் சூ-என்-லாய் வருகிற 24 ம் திகதி இலங்கைக்கு விஜயம்செய்து, மார்ச் 1-ம் திகதிவரை இங்கு தங்குவார் என்றும், அவரது சுற்றுப்பிரயாணத்திற்கான விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாயும் பாதுகாப்பு, வெளிவிவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா இன்று பார்லிமெண்டில் கூறினர்.

இலங்கைப் பிரதமர் சீனவுக்குச் சென்றிருந்தபோது இங்கு வருமாறு விடுத்த அழைப்பை சீனப் பிரதமர் ஏற்றுக்கொண்டார் எனவும் சீனப் பிரதமர் இங்கு பரஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

## சூ-என்-லாயின் விஜயம்பற்றி விளக்கமான அறிக்கை வேண்டும்

### பார்லிமெண்டில் ஜே. ஆர்.

கொள்ளுப்பிட்டி, வியாழன்

சீனப்பிரதமரின் இலங்கை விஜயம் மர்மமாக இருந்துவருவதாகவும், அவர் எதற்காக வருகிறார் என்பது பற்றியும் பிரதமரும் அவரும் எதைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனவும் அரசாங்கம் அறிக்கை வெளியிடவேண்டுமென்று இன்று பார்லிமெண்டில் ஜே. ஆர் ஜெயவர்த்தன கேட்டுக்கொண்டார்.

சீன இலங்கையில் கப்பல் தளம் ஒன்றை நிறுவுவதுபற்றி அரசாங்கம் மறுத்திருந்தபோதிலும் திருமலையிலோ அல்லது கொழும்பிலோ கப்பல் போக்குவரத்து கந்தோர் ஒன்றை திரு. சூ-என்-லாய் திறந்துவைக்க இருப்பதாகத் தான் கேள்வியுற்றதாகவும் திரு. ஜெயவர்த்தன சபையில் தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் இது பற்றிக் குறிப்பிடுகையில் அந்தத் தகவலில் எதுவித உண்மையுமில்லையெனத் தெரிவித்தார்

திரு. சூ-என்-லாயின் இலங்கை விஜயம் நல்லெண்ண விஜயமோ அல்லது இலங்கைப் பிரதமருடன் முக்கிய பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இங்கு வருகிறாரோ என்பது தனக்கு தெரியவில்லை எனவும் திரு. ஜெயவர்த்தன குறிப்பிட்டார்.

சென்ற நவம்பர் மாதத்தில் இந்தியப் பிரதமர் நேரு, இலங்கையிலிருந்து பார்லிமெண்டரி நல்லெண்ணத் தூதுகோஷ்டி ஒன்றை அழைத்திருப்பதாகத் தெரிவித்திருந்ததாகவும், முன்னாள் சபாநாயகர் தலைமையில் ஒரு கோஷ்டி இந்தியா செல்லவிருந்த சமயம் வெளிவிவகார அமைச்சில் உள்ள "துஷ்டமான" உத்தியோகஸ்தர் ஒருவர் அதை தடைசெய்ததாக தான் அறிவதாகவும் திரு. ஜே. ஆர். தெரிவித்தார். இலங்கை-இந்தியர் பிரச்சினை தீரும் வரை இலங்கையிலிருந்து நல்லெண்ணத் தூதுகோஷ்டியை இந்தியா செல்லவிடுவதில்லையென இந்த

(6-ம் பக்கம் பார்க்க)

## பி. எஸ்., சாம்சபாபதிக்கு மாநகரசபை அனுதாபம்

யாழ்ப்பாணம், சனி

"யாழ்ப்பாண மாநகரசபையின் முதலாவதுமாநகர முதல்வரும், 13-ம் வட்டார முன்னைநாள் உறுப்பினரும், யாழ். பொதுஜன நூல்நிலையத்திற்கு திட்டமிட்டவரும, பிரல வழக்கறிஞருமான திரு. சாம் ஏ. சபாபதி ஜே. பி. காலமானதையிட்டு மனம் வருந்தும் இச்சபை, அன்னாரைப்பிரிந்து வாடும் அவர் குடும்பத்தினருக்கு அனுதாபச் செய்தியை அனுப்பி வைப்பதென்றும், இச்சபையின் முதலாவது மாநகர முதல்வராக இருந்து இந்நகரத்திற்கு அவர் செய்த பெரும் சேவைக்காக அன்னாரது திருவுருவப்படமொன்று, சபை மண்டபத்தில் இடம்பெற வேண்டுமென்றும் இச்சபை தீர்மானித்திருக்கிறது".

நேற்று மாலை மேயர் திரு. துரைராசா தலைமையில் நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் 13-ம் வட்டார அங்கத்தவர் திரு. க. வி. தெய்வேந்திரம், மேற்கண்ட தீர்மானத்தைப் பிரேரிக்க, 1-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் அனுவதித்தார். அவரின் மறைவுக்காக 2 நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

"தரும ஸ்தாபனங்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் மற்றும் சமூகசேவைகளுக்கும் தளராது வழங்கிய கொடை வள்ளலும் வைத்திய மேதையுமான கலாநிதி எஸ். சுப்பிரமணியம் அவர்களின் மரணத்தையிட்டு வருந்தும் இச் சபை அன்னாரின் குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது." என்ற தீர்மானத்தை திரு பி எவ். சேவியர் பிரேரிக்க ஹாஜி வி. எம். எம். அபுசாலி அனுவதித்தார். அவரின் மறைவு குறித்தும் 2 நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று மாலை இழுக்கப்பட்ட கைத்தொழில் சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
14 W 0860 — ரூ 18,410

இரண்டாவது பரிசு
15 A 0719 — ரூ, 9,200

மூன்ருவது பரிசு
13 D 0969 — ரூ. 4,600

(6-ம் பக்கம் பார்க்க)

## பர்மாவில் சூ-என்-லாய்

ரங்கூன், பெப். 14

சீனப் பிரதமர் சூ-என்-லாய் இன்று ரங்கூன் வந்துசேர்ந்தார். பர்மாவில் அவர் 5 நாள் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

## ஜவுளிகளுக்கு விசேஷ கூப்பன்

கொழும்பு, வெள்ளி

பங்கீட்டரிசிப் புத்தகங்களை ஏற்கனவே அரசாங்கத்திடம் ஒப்படைத்தவர்களும், பங்கீட்டரிசிப் புத்தகங்கள் இல்லாதவர்களும், ஜவுளிகள் பெறுவதற்காக விசேஷ கூப்பன்கள் வழங்கப்படும்.

மக்கள் எல்லோரும் ஜவுளிகள் பெறக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக, இவ்விசேஷ கூப்பன்களை வழங்க மந்திரிசபை தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

## இன்று கான்பூரில் 5-வது டெஸ்ட்

கான்பூர், பெப். 15

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே ஐந்தாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று கான்பூரில் ஆரம்பமாகிறது.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

## மணிவாக்கு

ஒரு மனிதனின் குரல் வானொலிமூலம் உலகின் மூலைமுடுக்குக்கும் எட்டுகின்றது. அப்படியிருக்க உயிர்க் கடவுளின் குரல் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு வியாபாரத்திலும், ஒவ்வொரு பார்லிமெண்ட் சபையிலும் தீவிரமான ஆக்க சக்தியாக ஏன் ஒலிக்கக்கூடாது?

— பிராக்புக்மன்

ஈழநாடு
EELA NADU

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு மாசி மீ 3 உ. (15-2-64)

## தோட்டக் குழந்தைகளின் போதனு மொழி

பாடசாலைகளில் பாட போதனைகள் பெற்றோரின் விருப்பத்துக்கமைய சிங்களம் அல்லது தமிழ்மூலம் அளிக்கப்படுமென்றும் "உலக வழமையின் பிரகாரம்" இலங்கையரல்லாதவர்களுக்கு உத்தியோமொழிமூலம் கல்வி அளிக்கப்படுமென்றும் அரசாங்கத்தின் தேசியக் கல்விமுறைபற்றிய வெள்ளையறிக்கையில் தெரிவிக்கப்படுள்ளது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இது நியாயமாகத் தோன்றும். ஆனல் மலைநாட்டுத் தமிழ்க் குழந்தைகளுக்கு இது பெரிய அநீதி செய்வதாகும்.

மனிதஉரிமைகள் மறுக்கப்பட்டு ஏற்கனவே பலகஷ்டங்களை அனுபவித்துவரும் தோட்டப்பகுதி தமிழ்க் குழந்தைகளுக்கு தாய்மொழி மூலம் கல்வி கற்கும் உரிமையை வழங்க மறுப்பது பெரும் பாவமாகும். இதர பிள்ளைகளுக்கு தாய்மொழிமூலம் கல்விகற்கும் உரிமையை வழங்குகையில் இந்நாட்டின் ஒருபகுதி மக்களுக்கு அந்த உரிமையை மறுப்பது நியாயமா? உலகநாடுகளில் உள்ள வழமைபோல் உத்தியோகமொழியில் கல்வி போதனை அளிக்கப்படுமென வெள்ளை அறிக்கை குறிப்பிடுகிறது. தாய்மொழி மூலம் கல்வி அளிக்க மறுப்பது ஐ. நா. மனிதஉரிமை சாஸனத்துக்கும் குழந்தைகள் உரிமை சாஸனத்துக்கும் முரணானதென்பதை ஐ. நா.வின் அங்கத்துவ நாடான இலங்கை மறக்க முடியாது.

"உத்தியோகமொழி"ச் சட்ட அமுலால் ஏற்கெனவே நாட்டில் அமைதியின்மையும் சமூகங்களுக்கிடையில் வேற்றுமையும் நிலவிவருவதுடன் நாட்டின் முன்னேற்றமும் தடைபட்டுள்ளது. இந்நிலையில் தோட்டப்பகுதிப் பிள்ளைகளின் போதனு மொழிலும் பிரச்னையை ஏற்படுத்துவது நாட்டுக்கு நல்லதல்ல.

பல்லாண்டு காலமாகதோட்டப்பகுதி தமிழ்க் குழைந்தைகளுக்கு அவர்கள் தாய்மொழியான தமிழ்மூலமே கல்விகற்பிக்கப்பட்டு வந்துள்ளது. அப்படி இருக்க திடீரென அவர்களை இலங்கைப் பிரஜைகளல்லவென்றும் அவர்களுக்கு தமிழ் மூலம் கல்வி கற்பிக்கத்தேவையில்லை என்றும் கூறி வேறு மொழிமூலம் கல்வி போதிக்கச் செய்வதாயின், அது உண்மையில் அவர்களுக்குக் கல்வியை அளிக்க மறுப்பதற்கே ஒப்பாகும். ஏற்கெனவே தோட்டப்பகுதியில் கல்வி போதனை மற்றப் பகுதியிலுள்ளதைவிட மிக மோசமாகும். இப்புதிய யோசனை அமுலுக்குவரின், அவர்களுக்கு கல்வி உரிமையை உண்மையில் அடியோடு மறுப்பதாக முடியும்.

---

## யாழ்ப்பாணத்தில் இந்திய ஹைகமிஷன் கிளை

யாழ்ப்பாணத்திலே இந்திய ஹைகமிஷனின் ஒரு கிளை ஸ்தாபனம் அமைக்கப்படவேண்டுமென்ற ஒரு முக்கிய யோசனை, இலங்கை இந்தியர் சங்க ஆண்டு விழாவில் தெரிவிக்கப்பட்டது. இங்கு பல்லாயிரக் கணக்கான இந்தியர் வசிப்பதாலும், அவர்களுக்குப் பல பல சங்கடங்கள் ஏற்பட்டுள்ளதாலும், இவ்வித கிளை ஸ்தாபனத்தை அமைக்கவேண்டியது மிக அவசியமென்றும் கூறப்பட்டது. பாஸ்போர்ட், விஸா முதலியவற்றை வாங்க வேண்டுமானல், தூரத்திலுள்ள கொழும்புக்குச் செல்ல வேண்டியுள்ளது. இங்கு ஹைகமிஷன் கிளை ஸ்தாபிக்கப்பட்டால், இந்தியர்களுக்குமட்டுமன்றி, மற்றவர்களுக்கும் மிக உதவியாக இருக்கும். சில ஆண்டுகளுக்குமுன் இந்த யோசனை கூறப்பட்டதெனினும், இதுவரை இது கைகூடவில்லை. இதைப்பற்றிப் புனராலோசனை செய்து சீக்கிரத்தில் யாழ்ப்பாணத்தில் இவ்வித கிளை ஸ்தாபனத்தை ஏற்படுத்தினல், பலருக்கும் கஷ்ட நிவாரணமாவதுடன் இரு நாட்டின் நல்லுறவும் பலப்படுவதாகவும் இருக்கும்.

---

ஈதுல் பித்ர் தினத்தை முன்னிட்டு இங்கு இக்கட்டுரை வெளியிடப்படுகிறது

# உத்தம நபி (ஸல்) ஓர் உதாரண புருஷர்

— எம். கே. எச். முகம்மது —
(எருக்கலம்பிட்டி)

வாழ்க்கை பல சிக்கல்கள் நிறைந்தவொன்று. ஆழ்கடலில் தோன்றி மறையும் எண்ணற்ற அலைகளைப் போன்றும், மானிட மனத்தின்கண் தோன்றும் பல்கோடி எண்ண அலைகளைப் போன்றும் வாழ்க்கையில் தினமும் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவற்றுட் சில தீர்க்கப்படுகின்றன. மற்றும் சில வாழ்நாள் முழுவதும் தீர்க்கப்படாமலே இருந்தும் விடுகின்றன.

ஆதிபிதா ஆதம் (அலை) அவர்கள் தொடக்கம் இறுதி இறைத்தூதர் முகம்மது நபி (ஸல்) அவர்கள் ஈருக எண்ணற்ற இறைத்தூதர்களை இறைவன் இம்மானிலத்தில் தோன்றச் செய்தான். இவர்களின் எண்ணிக்கை ஒருலட்சத்து இருபத்தினாயிரம் வரையில் இருக்கக்கூடும் எனக் கூறப்பட்டபோதிலும் அவர்களுட் சிலரே அழியாப் புகழைத் தேடியவர்கள். இச்சிலருள் ஒருவர்தான் இறைத்தூதர்களுள் சிரேஷ்டராகவும், மாந்தருள் மாணிக்கமாகவும், வாழ்க்கையின் கலங்கரை விளக்காகவும், மானிடரின் உரைகல்லாகவும் திகழும் இறைத்தூதர் றசூல் நாயகம் (ஸல்) அவர்களாகும். உண்மை பேசுதல், வாக்கை நிறைவேற்றுதல் அவமானத்தைசகிப்பாறுதல், நேர்மை, அன்பு, கருணை, ஈகை, விசுவாசம் முதலாம் நற்குண நற்செய்கைகளில் சிறந்த அன்னவர்களின் பெருமையையெடுத்துக் கூறுவது, பரந்த சமுத்திரத்தில் ஒரு சிறிய சிரட்டை தனது சொண்டினல் பெறும் நீரையொக்கும். எனினும் இம்மகிழ்ச்சிகரமான "ஈத்" தினத்தில் அன்னவர்களின் பண்புகளுட் சிலவற்றையாவது குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும்

### பொறுமையே தமது ஆயுதம்

புதிய எண்ணங்களையும் புரட்சிகரமான கருத்துக்களையும் வெளியிட்ட எவரும் துன்பத்தை அனுபவியாமல் இருந்ததில்லை என்பது சரித்திரம் காட்டும் உண்மை. சாதாரண மனிதர் மாத்திரமன்றி இறைத்தூதர்களும் இவ்வின்னல்களை அனுபவித்தே வந்துள்ளனர். இறைவனல் தமக்குச் சாட்டப்பட்ட வேதத்தைப் பரப்ப முற்பட்ட இவர்கள் கல்லெறிபட்டார்கள். சொல்லொணுத் துன்பப்பட்டார்கள். சிலர் தமது உயிரையே தமது கொள்கைக்காகப் பரித்தியாகம் செய்தார்கள். துன்பங்களைப் பொறுக்க முடியாத சில இறைதூதர்கள பெருவெள்ளத்தினலும், கரிய இருளினலும், பசி பட்டினியாலும் மக்களை அழியச் செய்தனர். நாயகத் திருமேனியவர்களும் இவ்விதமான துன்பங்களை அனுபவித்தே வந்தனர். எதிரிகள் அவர்களுக்குக் கற்களால் எறிந்து காயப்படுத்தினர். குப்பைகூளங்களை அவர்களின் திருமேனியில் கொட்டினர். செத்த மிருகங்களின் துர்நாற்றம் வீசும் குடல்களை மாலையாக அணிவித்தனர். இறுதியில் அன்னவர்களின் உயிருக்கே உலைவைக்கத் திட்டமிட்டனர். இதனலேயே நபியவர்கள் தமது பிறந்த பொன்னுடாம் மக்காவை விட்டு மதீனவுக்கு ஓடிச் சென்ருர்கள். இதன்மூலம் அவர்கள் அனுபவித்த இன்னல்கள் எவ்வாறனது என்பதையறிந்து கொள்ளலாம். நபி (ஸல்) அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் கண்டு சகிக்கமாட்டாத வானவருக்கதிபதியாம் ஜிபுறீல் (அலை) பன்முறை எம்பெருமானிடம் வந்து எதிரிகளை நாசஞ் செய்ய உத்தரவு கேட்டதுண்டு. இச்சந்தர்ப்பங்களில் அண்ணலவர்கள் நினைத்திருந்தால் எதிரிகளைச் சாம்பலாக்கியிருப்பார்கள். ஆனல் எமது நாயகம் அவ்வாறு ஒருபோதும் செய்ததில்லை. தம்மீது இரக்கங்காட்டும் ஜிப்றீல் (அலை) அவர்களிடம் "இவர்கள் என்னை வெறுக்கலாம். ஆனல் இவர்களுடைய சந்ததியினராவது எனது மார்க்கத்தைப் பின்பற்றுவார்கள்" என்றுபுன்முறுவல் பூத்த முகத்துடன் கூறிவிடுவார்கள். இவ்வாறு பொறுமையையே தமது ஆயுதமாகக் கொண்டமையினலே அண்ணலவர்கள் இறைத்தூதர்களுள் சிரேஷ்டராக எண்ணப்படுகின்றர். அன்றியும் 'இஸ்லாம்' என்ற பேரொளி உலகெங்கணும் மின்னல் வேகத்தில் பரவுவதற்கு இப்பொறுமையே வழிவகுத்தது என்பது மறுக்கவோ அன்றி மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

### அன்பே தமது அடைக்கலப் பொருள்

"அடிமைகளை அன்பாக நடாத்துங்கள். அவர்களுக்கு உரிமை வழங்குங்கள்" என்ற நபியவர்களின் கூற்றிலிருந்து அன்னவர்களின் பண்புதென்னிதிற புலனுகும். எதிரிகளைக்கூட அன்பாக நடாத்தும் பண்புள்ளம் படைத்தவர்கள் அவர்கள். யுத்தங்களில் அகப்பட்ட கைதிகளுக்கு உரிமை வழங்கி அவர்கள் வாழும் வகையில் விலங்குகளையும் பொருட்களையும் வாரிவழங்கினர்கள். எதிரிகளைக்கூட அன்பாகவும் கண்ணியமாகவும் நடாத்தினர்கள். என்றன் அன்னவர்கள் தமது மனைவி, மக்கள், சுற்றம், சன்மார்க்கத்தில் சேர்ந்தோர் ஆகியோர் நடாத்தியமைபற்றிக் கூறவும் வேண்டுமோ?

### செயல் வீரர்

சாதாரண இல்லத்தில் வாழ்ந்து வந்த இவர்கள் ஏழ்மையே கடைப்பிடித்தார்கள். விருந்தோம்பலில் வல்லவர் இதனல் தமது உணவுகளை பிறருக்குத் தியாகம் செய்த இவர்கள் பன்முறை பட்டினி கிடக்க நேர்ந்தது. பசிப்பிணியால் உடல் தளர்வுறுதபடி கற்களை வயிற்றில் கட்டிக் கொள்ளுவார்கள். தாம் விரும்பும் பொருட்களையே பிறருக்கும் கொடுப்பார்கள்.

தமது ஆடைகளைத் தாமே துவைத்துக் கொள்ளுவார்கள. தமது பாதணிகளைத் தாமே தைத்துக் கொள்ளுவார்கள். கடை வீதிக்குத் தாமே தமக்குத் தேவையான சாமான்களை வாங்கச் செல்லுவார்கள். இவ்வாறு செல்லும் நேரங்களிலெல்லாம் அயலாருக்குத் தேவையான சாமான்களைக் கூட வாங்கிக்கொண்டு வருவார்கள். தாம் செய்யாத ஒன்றைப் பிறர் செய்யத் தூண்டார்கள் என்பதற்குப் பின்வரும் ஒன்றே சான்றுபகரும்.

ஒருநாள் ஒரு சகாபி தனது மகனுடன் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, தனது மகன் சீனிதின்பதில் அதிக விருப்பமுடையவனுக இருப்பதனல் அப்பழக்கத்தை விடுமாறு புத்திபுகட்ட வேண்டுமென்று கேட்டார். அண்ணலவர்கள் அச்சகாபியை மறுநாள் வருமாறு பணித்தார்கள். சகாபி மறுநாள் வந்த போது சீனி தின்பதனல் விளையும் தீமைகளைச் சிறுவனுக்கு எடுத்துச் கூறினர்கள். அதனைக் கண்ணுற்ற சகாபி, "நபியே இதனை நேற்றே கூறியிருக்கலாமே" என்ருர்கள். அதற்கு றசூல் நாயகம் (ஸல்) அவர்கள் "நானும் நேற்றுச் சீனியை விரும்பித் தின்பவனுகவேயிருந்தேன். தான் செய்யாத ஒன்றை பிறர் செய்யத் தூண்டுவது முறையாகுமா!" என்ருர்கள்.

---

## பல்கலைக் கழக சட்டம் திருத்தப்படும்?

கொழும்பு, வெள்ளி

பல்கலைக்கழகச் சட்டத் திருத்தம் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல கவர்னர் ஜெனரலையும் பிரதம மந்திரியையும் விரைவில் சந்திக்கவிருக்கிருர்.

பேராசிரியர்கள் நியமன விஷயத்தில் பல்கலைக்கழக வேந்தர்கள் தலையிட இச்சட்டத் திருத்தம் வகைசெய்யும்.

பல்கலைக் கழகச் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்துமாறு அரசாங்க பார்லிமெண்டரிக் குழு அங்கத்தவர்கள், சில எதிர்க்கட்சி அங்கத்தவர்கள், பல பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் தம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கல்வி மந்திரி திரு. கலுகல்லை தெரிவித்துள்ளார்.

---

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே இலங்கை இந்தியர் சங்கத்தின் முதல் ஆண்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலை 6 முதல் இரவு 12 மணிவரை படப் பாட்டுகள், நாதசுர இசை, கதம்பக்கச்சேரி, இந்திய செய்திப் படங்கள் முதலியவை ஜமாய்த்துவிட்டன.

இடம் காணுது. எதிர்பார்த்ததைவிட அதிக கூட்டம். தாய்மார்களும், குழந்தைகளும் அதிகமாக வந்திருந்தனர். கள்ளங்கபடமற்ற அக்குழந்தைகளைப் பார்த்தேன். அவர்கள் எல்லாம் இங்கு ஈழத்திலே பிறந்தவர்கள. இயற்கையின் நியதிப்படியும், சர்வதேச மனித நீதியின்படியும் இந்நாட்டிலே தொடர்ந்து வசிக்க எல்லா உரிமையும் பெற்றவர்கள் பிரதமர் சிறிமாவின் குழந்தைகளுக்கு இந்நாட்டில் எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை தெய்வநீதியின்படி இவர்களுக்கும் உண்டு. இது அவர்கள் பிறப்புரிமை. எந்தச் சக்தியும் அதை மறுக்கமுடியாது.

இவர்களது எதிர்காலம் என்ன? இவர்களெல்லாம் 'கள்ளத்தோணிகளா'? இவர்களுக்கு இலங்கையைத் தவிர வேறு எந்த நாடும் தெரியுமா? அப்படியிருக்க இவர்களையெல்லாம் நாடுகடத்துவதா? இது பெரும் பாவமல்லவா? என்று பலபல எண்ணங்கள் என் மனதில் ஓடின.

* * *

குழந்தைகளாயினும் அவர்களுக்கு நல்லறிவுண்டு. பெரியவர்களைவிடவும்கூட சில குழந்தைகளுக்கு அதிக அறிவு இருப்பதைப் பார்க்கின்ருேம். அவர்களும், தாய்மார்களும் அமைதியாக இருந்து பலர் பேசியதையும் மிக நுணுக்கமாகக் கவனித்துவந்தனர். தங்களுக்கு இந்த நாட்டில் இடம் உண்டா இல்லையா, தங்கள் எதிர்காலமென்ன என்பதை அறிய மிக ஆவலுடனிருந்து கேட்டனர்.

ஆங்கிலம் படிக்காத சாதாரண தொழிலாளரும், வாலிபரும் உணர்ச்சியுடன் பேசியதைக் கேட்டேன். உள்ளத்தைத் தொட்டது. இங்குள்ள இந்தியக் குடும்பங்களின் சங்கடங்களை நேரில் கேட்டால், ஒரு தாயென்று பெருமை கொள்ளும் பிரதமர் சிறிமாவும்கூடக் கண்ணீர்விடுவார். கல்மனமும் கரையும்.

"இனி புதிதாக யாரையும் இந்தியாவிலிருந்து வரவிட வேண்டாம். ஏற்கெனவே இங்கிருந்து வருபவர்களையும், இங்கு பிறந்தவர்களையும் 'போ' என்று எப்படிச் சொல்வது? இலங்கையில் உள்ள எல்லாச் சமூகத்தவரும் முன்பின்னுக இந்தியாவிலிருந்து வந்தவர்களே..." என்று ஓர் இலங்கை அன்பர் உணர்ச்சியுடன் தெரிவித்தார்.

* * *

இவர்களில் பலரும் சின்னச் சின்னத் தொழிலைச் செய்து நாணயமாக, அமைதியாக வாழ்கின்றனர். பெண்கள் கடுமையாக உழைக்கின்ருர்கள். மற்றவர்களுக்கு இவர்களால் எவ்வித பாதகமுமில்லை. இதற்கு மாருக, மிகவும் உதவியாகப் பாலில் சீனி கலந்தது போல் வாழ்ந்துவருகின்றனர்.

இரவில் வீடுகளில் புகுந்து, ஆண், பெண், குழந்தைகளையும் கைதுசெய்து பொலிஸ் ஸ்டேஷனுக்குத் திடீரெனக்கொண்டு சென்ருர்களல்லவா? அதன் பயனுக விளைந்த ஒரு நற்பயனே இந்தச் சங்கம், 13 மாதங்களுக்குள்ளாக ஆயிரம் பேருக்கு மேல் அங்கத்தனராக சேர்ந்து விட்டனராம். சபாஷ்!

* * *

சங்க விழாவில் கதம்பக் கச்சேரி நடத்திய கோபாலதியாகராஜாவின் கலைவிருந்து பரமாதம். பலரது பாராட்டுகளையும் பெற்றது.

(5-ம்பக்கம் பார்க்க)

# இந்தியா வரும் பாகிஸ்தான் அகதிகளுக்கு சட்டத்தடை இல்லை

## பார்லிமெண்டில் நந்தா அறிவிப்பு

புதுடில்லி, பெப். 14

கிழக்கு பாகிஸ்தானிலுள்ள இந்து சிறுபான்மையினரை இந்தியாவுக்கு வருமாறு இந்திய அரசாங்கம் தூண்டுகிறதென்றும் இந்தியாவிலிருந்து முஸ்லிம் சிறுபான்மையினர் வெளியேறுவதற்கு ஈடாக வெளிஉலகுக்கு எடுத்துக் காட்டவே இந்தியா இவ்விதம் செய்வதாக பாகிஸ்தான் தெரிவித்த குற்றச்சாட்டை இந்திய உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா மறுத்தார்.

"எவரும் தங்கள் தொழில் வசதிகளை கைவிட்டுவிட்டு இடம் பெயர்ந்து வரவிரும்ப மாட்டார்கள். அதுவும் இடம் பெயர்ந்து வந்ததும் வேலை தொழில் வாய்ப்புக்கள் உடன

(4-ம் பக்கம் பார்க்க)

## சைப்ரஸில் கடும் சண்டைக்குப் பின் அமைதி நிலவுகிறது

நிக்கோஸியா, பெப். 14

சைப்பிரஸின் இரண்டாவது பெரிய நகரமான லிமோஸோவில் நேற்று கிரேக்க சைப்ரஸ்காரருக்கும் துருக்கியசைப்ரஸ்காரருக்குமிடையே கடும் சண்டை நடைபெற்றதாகவும் இச்சண்டையில் பதினொருபேர் மாண்டதாகவும் பன்னிரண்டு பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. முதலில் 50 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

இச்சண்டை நடைபெற்றசமயம் பிரிட்டிஷ் துருப்புக்கள் பார்த்துக் கொண்டு நின்றதாகவும் சைப்ரஸ் அரசாங்கம் கேட்டுக் கொண்டாலே பிரிட்டிஷ் துருப்புகள் இதில் தலையிட முடியுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

இப்பொழுது லிமோஸோவில் அமைதி நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது.

சைப்பிரஸுக்கு மேலும்பிரிட்டிஷ் துருப்புகள் அனுப்பப்பட விருக்கின்றன. அவசியமேற்பட்டால் லிமோஸோவிலுள்ள பிரிட்டிஷ் குடும்பங்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றுவதென முடிவு செய்யப்பட்டுளதாம்.

## சைப்ரஸ் நிலைமை பற்றி ஹியூம் - ஜோன்சன் கவலை

லண்டன், பெப். 14

அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோன்சனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பிரிட்டிஷ் பிரதமர் சேர் அலெக்ஸ்டக்ளஸ் ஹியூம் இன்று லண்டன் திரும்புகிறார்.

சுமுகமான நட்புறவுச் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு அவர் திரும்புவதாக இங்கு கருதப்படுகிறது.

வாஷிங்டனில் இருதலைவர்களும் விடுத்த கூட்டறிக்கையில் சமாதானத்தைப் பாதுகாப்பதே தங்கள் நோக்கம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திரு. ஜோன்சனும் சேர் ஹியூமும் சைப்ரஸ் நிலைமை பற்றி முக்கியமாகப் பேசியதாகவும் இன்னும் இரண்டு தினங்களுக்கு சைப்ரஸில் நிலைமை மோசமாக இருக்குமென இருவரும் அபிப்பிராயப் பட்டதாகவும் அறியப்படுகிறது சைப்ரஸில் உள்நாட்டுச் சண்டையை நிறுத்த சகல முயற்சியும் செய்யப் படவேண்டுமென்றும் உள்நாட்டுச் சண்டையின் முடிவு எவ்வாறாகுமென எவரும் சொல்ல முடியாதிருப்பதாகவும் இருவரும் கருத்துத தெரிவித்தனர்.

கியூபா பற்றியும் இருவரும் பேசியதாகவும் கியூபாவுடன் பிரிட்டன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருப்பது பற்றி சேர் ஹியூம் விளக்கம் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

படைகுறைப்பு பற்றியும் இருவரும் ஆலோசனை செய்ததாகவும் அறிவிக்கப் பட்டது.

## வி. டி. கிருஷ்ணமாச்சாரி சென்னையில் காலமானர்

சென்னை, பெப். 14

இந்திய திட்டக்கமிஷன் உபதலைவராகப் பணியாற்றிய திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி நேற்று இங்கு காலமானர் அவருக்கு வயது 83. 1927-ம் ஆண்டு தொடக்கம் 17 வருடங்கள் பரோடா ராஜ்யத்தின் பிரதமமந்திரியாகவும் 1946-ம் ஆண்டு தொடக்கம் 49-ம் ஆண்டுவரை ஜெயப்பூர் ராஜ்யத்தின் பிரதமமந்திரியாகவும் பணியாற்றிய திரு. கிருஷ்ணமாச்சாரி இந்திய அரசியல் நிர்ணயசபையின் உபதலைவராகவும் நிதிக்குழு உபதலைவராகவும் திட்டக்கமிஷன் உபதலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவரது மறைவு குறித்து இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கிருஷ்ணமாச்சாரியின் புதல்விக்கு அனுப்பியுள்ள ஒரு அனுதாபச் செய்தியில் திரு. கிருஷ்ணமாச்சாரியின் நிர்வாகத் திறமையைப் புகழ்ந்துள்ளார்.

## மே மாதத்தில் பிரிட்டிஷ் தேர்தல்

லண்டன், பெப். 14

பிரிட்டனில் மே மாதக் கடைசியில் அல்லது ஜூன் மாத முற்பகுதியில் பொதுத் தேர்தல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏப்ரல் மாதம் 14ந் திகதி வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுமென திரு. செல்வின் லாயிட் அறிவித்ததைத் தொடர்ந்தே பொதுத் தேர்தல் மார்ச் மாதம் நடைபெற மாட்டாதெனவும் மே அல்லது ஜூன் மாதத்தில் நடைபெறுமெனவும் கருதப்படுகிறது.

வரவு-செலவுத் திட்டத்தில் பிரிட்டனின் பாதுகாப்புக் கொள்கையில் மாறுதல் எதுவும் இருக்காதெனவும் கருதப்படுகிறது.

## தூதர்கள்-சாஸ்திரி சந்திப்பு

புதுடில்லி, பெப் 14

புதுடில்லியிலுள்ள அமெரிக்க தூதர் செஸ்டர்பவல்சும பிரிட்டிஷ் ஹைகமிஷனர் சேர் போல்கோர்பூக்தும் திரு லால்பகதூர்சாஸ்திரியை தனித்தனியாகச் சந்தித்துப் பேசினர். காஷ்மீர்பற்றிய இந்தியாவின் உறுதியான நிலை திரு. சாஸ்திரி, அவர்களிடம் விளக்கிக் கூறியதாகத் தெரிகிறது.

அமெரிக்கதூதர் 90 நிமிடமும் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் 45 நிமிடமும் திரு. சாஸ்திரியுடன் பேசினர்.

ஐ. நா. பாதுகாப்புச்சபையில் பிரிட்டிஷ்தூதர் இந்தியாவுக்கு மாறுகக் கருத்துத தெரிவித்ததால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள கோபக்கைத்தணிக்கும் முறையில் பிரிட்டிஷ்தூதர் திரு. சாஸ்திரியுடன் பேசியதாகத் தெரிகிறது.

---

## சரோஜினி தினம்

புதுடில்லி, பெப். 13

கவியரசி சரோஜினி தேவியின் 85 வது பிறந்ததினம் இன்று மாதர்கள் தினமாகக் கொண்டாடப்பட்டது. அவரது ஞாபகார்த்தமாக 15 நயாபைசா முத்திரையை நிதிமந்திரி திரு டி. டி. கே. வெளியிட்டார் லால்பகதூர்சாஸ்திரி திரு அசோககுசன் ஆகிய மந்திரிகள் ஸ்ரீமதி சரோஜினிக்குப் புகழஞ்சலி செலுத்தினர். உபஜனாதிபதி டாக்டர் ஸகிர்ஹூஸெய்ன் விடுத்துள்ள ஒரு செய்தியில் ஸ்ரீமதி சரோஜினி விடுதலைப் போராட்டத்தில் முக்கிய இடம்வகித்தார் என்றும் நாடு தோற்றுவித்த பெருமைமிக்க பெண்மணிகளில் அவர் ஒருவர் என்றும் கூறியிருக்கிறார்.

## தேர்தலில் நிற்க மறுப்பு

புதுடில்லி, பெப். 14

இந்திய பார்லிமெண்டுக்கு ஒரு தொகுதியில் போட்டியிடுமாறு விடுத்த கோரிக்கையை பிரதமர் நேருவின் மகள் இந்திரா காந்தி நிராகரித்துவிட்டார்.

மத்திய இந்தியாவுக்கருகில் மகாசமுந்த் என்ற இடத்தில் நடைபெறவிருக்கும் உப தேர்தலில் போட்டியிடுமாறு திருமதி இந்திரா காந்தியை ஸ்ரீ கிருஷ்ண அகர்வால் என்பவர் கேட்டிருந்தார்.

ஸ்ரீ கிருஷ்ண அகர்வாலுக்கு எழுதிய பதிலில் எந்தத் தொகுதியிலும் தாம் தேர்தலுக்கு நிற்க விரும்பவில்லையென்று திருமதி இந்திரா காந்தி அறிவித்துள்ளார்.

---

## 'சீனாவில் உருவான புரட்சி'

வியப்போல்ட்வில்லி, பெப். 13

காங்கோவின் மேற்கு மாகாணமான கிஷலுவில் நடைபெற்ற 'புரட்சி' சீனாவில் உருவாக்கப்பட்டதென்று காங்கோ திட்ட மந்திரி திரு. கினியோபஸ் காமிட்டாட்டு தெரிவித்தார்.

அரசாங்க ஆதரவுள்ள பத்திரிகையில் அவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் கிஸங்காவின் உதவியாளரான பியரி முலே பீகிங்குக்குச் சென்றுவிட்டு ஜூலை மாதத்தில் கிஷலூருக்குத் திரும்பியதாகவும், இதன்பின்னரே புரட்சிக்கு வழிவகுத்ததாகவும் குறிப்பிட்டுளளார்.

---

## அனுமதி மறுப்பு

புதுடில்லி, பெப். 14

டாக்காவிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனர் கிழக்குப் பாகிஸ்தானில் கலகம் நிகழ்ந்த பகுதிகளுக்குச் சென்று பார்வையிடவும், அகதிகள் முகாமுக்குச் சென்று பார்வையிடவும் அனுமதி கோரியிருந்தாரெனவும் இதற்குப் பாகிஸ்தான் அரசாங்கம் மறுத்துவிட்டதென்றும் அறிவிக்கப்படுகிறது.

---

## சங்கரிடம் பொறுப்பு

புதுடில்லி, பெப். 14

மந்திரி சாக்கோவின் கார் விபத்து வழக்கு முடிவடையும்வரை உள்துறை இலாகாவை நிர்வகிக்கும் பொறுப்பு தம்மிடம் கொடுக்கப்பட்டுளளதாக கேரள முதலமந்திரி சங்கர் தெரிவித்தார்.

---

## லாவோஸ்

வியன்டைன், பெப். 14

மத்திய லாவோசில் ஜார்ஸ் வெளிக்குக் கிழக்கே வலதுசாரித் துருப்புகள்மீது இடதுசாரி பதட்லாவோஸ் படைகள் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

---

## கிணறுகள்

புதுடில்லி, பெப். 14

சென்ற பத்து வருட காலத்துக்குள் ஏழு லட்சத்துக்கும் அதிகமான கிராமங்களில் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளனவாக இந்திய சுகாதார மந்திரி திருமதி சுசீலா நய்யார் தெரிவித்தார்.

## தமிழ்நாட்டு செய்திகள்

### 75 ஆண்டுவரை ஆங்கிலம் நீடிக்கும்

"ஹிந்தி நமது மாகாணத்தில் கட்டாயமாக்கவில்லை. இங்கு ஆங்கிலம், தமிழ், ஹிந்தி மூன்றிற்கும் சமவாய்ப்பு அளித்திருக்கிறோம். 1975-ம் ஆண்டுவரை ஹிந்தியுடன் ஆங்கிலம் நீடிக்கும்" என்று பொலிஸ் மந்திரி திரு. கக்கன் காங்கிரஸ் தேர்தல் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

### ஆழ்கடலில் மீன்பிடித் தொழில்

ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்காக அரசாங்க உதவியுடன் ஒருகப்பல் வாங்குவதுபற்றி யோசிக்க ஒருகமிட்டியமைக்குமாறு சென்னை மீனவர்கூட்டுறவுசங்கத்துக்கு தொழில்மந்திரி திரு. வெங்கட்ராமன் யோசனை தெரிவித்தார்.

### தி. மு. க. கையில் நான்கு நகரசபை

இம்மாதம் 5-ம் திகதி நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் நான்கு நகரசபைகளை திராவிடமுன்னேற்றக்கழகம் கைப்பற்றியுள்ளது. நகரசபைகளுக்கு நடந்த தேர்தலில் தி. மு. க.வை சேர்ந்த 159 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

### குடிசையில் தீ

நஞ்சுண்டாபுரத்தில் நேற்று மாலை குடிசை ஒன்றில் தீ பிடித்துக் கொண்டதால் ரூ. 1000 பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடுப்பிலிருந்து கிளம்பிய தீப்பொறியே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

### சென்னையில் சாக்கோ

கேரள உள்துறைமந்திரி திரு. சாக்கோ புதுடில்லியிலிருந்து விமானத்தில் சென்னை வந்துசேர்ந்தார். காங்கிரஸ் மேலிடம் மேற்கொண்ட முடிவு குறித்து அவரிடம் கேட்டபோது தான் சந்தோஷம் அடையாமல் இல்லை என்றார். முடிவைத் தான் தெரிவிப்பது தனக்கு உகந்ததல்லவென்றும் கூறினர்.

### கான்ஸ்டபிள் தாக்கப்பட்டார்

அகரம் கிராமத்தில் சண்முகம் என்பவரை தர்மலிங்கம் என்பவர் உதவியுடன் கைது செய்வதற்காக பொலிஸ் கான்ஸ்டபிள் ராமையாசென்றபோது சிலர் அவர்களைத் தாக்கிப் படுகாயப்படுத்தினர். உடனடியாக இருவரும் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

### கடற்கரையில் சடலங்கள்

சென்னையில் ராஜதானிக்கல்லூரிக்கு எதிரில் உள்ள மெரினாகடற்கரையில் நடுத்தர வயதுள்ள கர்ப்பிணி பெண்ணினதும் 3 குழந்தைகளினதும் சடலங்கள் ஒதுங்கிக் கிடந்தன. அவர்கள் யார் என்று இன்னும் அடையாளம் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்தப்பெண், குழந்தைகளின் தாயாராக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

### மாணவர்களும் அரசியலும்

மாணவர்கள் அரசியலில் பங்கு சொள்ளக் கூடாது என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவனாக இருந்து வந்தேன். ஆனால் நாட்டின் தற்கால நிலைமைபற்றி என் கருத்தை மாற்றிக் கொள்ளச்செய்கிறது என்று கிறுஸ்துவக்கல்லூரி மாணவர்மன்றக் கூட்டத்தில் பேசும்போது சுதந்திரக் கட்சித்தலைவர் திரு. ராஜகோபாலாச்சாரியார் கூறினர்.

### தவறு இல்லை

நகரசபைத் தேர்தல்களில் மந்திரிகள் வீடுவீடாகச்சென்று ஓட்டுகளை சேகரிபபதில் தவறு ஒன்றுமில்லை என்றும் இது குறித்து அவர்கள் பெருமைப் படுகின்றனர் என்றும் மந்திரி திரு. வெங்கட்ராமன் திருச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கூறினர்.

### மனைவிக்கு ரூ. 7,500 நஷ்டஈடு

லொறிவிபத்தில் மாண்ட கருப்பக்கவுண்டர் என்பவர் மனைவியும் மற்றும் இருவரும் லொறி அதிபர்மீது ரூ. 10,000 நஷ்டஈடு கோரி தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி விசாரணையின்பின் மனுதாரர்களுக்கு ரூ. 7,500 நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமெனத் தீர்ப்பளித்துள்ளார்.

### 12 நூற்புமில்கள்

தமிழ்நாட்டில் மேலும் 12 நூற்புமில்களை தனியார்துறையில் ஆரம்பிக்கமத்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. மதுரை, கோவை, நீலகிரி ஆகிய மூன்று வட்டமாங்கள் தவிர மற்ற வட்டமாங்களில் இவை அமையும்.

### கள்ளுக்கடை திறப்பார்!

கள்ளுக்கடைகளை திறக்க வேண்டுமென்று கோரி செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்டபிள் ஜானகிராமன், பொன்னேரி தாலுகா அலுவலகத்தின் முன் பகிரங்கமாக கள்ளுக்கடை வைத்து கள் விற்கபபோவதாக அறிவித்துள்ளார் இது சம்பந்தமான அறிக்கையை அவர் பொலிஸ் துறை மந்திரிக்கும், பொன்னேரி பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கும் அனுப்பியுள்ளார்.

# "சாம் சபாபதியின் சேவை என்றும் நினைவிருக்கும்"

யாழ்ப்பாணம், சனி

'திரு. சாம் சபாபதி நேர்மையின் சின்னமாக அமைந்தவர். அவரது திறமையான நிர்வாகத்தினால் யாழ்ப்பாண மாநகர சபை சிறப்புற்றிருந்தது. யாழ்ப்பாணத்தில் நல்லதொரு நூல் நிலையம் அமைய வித்திட்டவர் அவரேதான். அவரது சேவைகள் என்றும் நெஞ்சைவிட்டு நீங்காதவை'

நேற்று முன்தினம் காலமான பிரபல வழக்கறிஞரும், யாழ்ப்பாணமாநகரசபையின் முன்னாள் மேயருமான திரு சாம் ஏ. சபாபதியின் தகனக்கிரியைகள் நேற்று யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்தில்நடைபெற்றபோது உரை நிகழ்த்துகையில் யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேயர் தொடர்ந்து பேசுகையில் திரு. சாம் சபாபதியின் தொண்டுயாழ்ப்பாணத்துக்கே சிறப்பைக் கொடுத்தது என்றும் கூறினர்.

முன்னாள் செனட்டர் எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில் இறப்பு எல்லோருக்கும் வருவதாக இருந்தாலும் திரு. சாமின் இறப்பு ஒரு பேரிழப்பாக இருக்கிறதென்றும் நியாயத்துக்காகக் கடைசி வரை வாதாடக்கூடிய ஒரு திறமைசாலியின் பிரிவு துன்பத்தைக் கொடுத்துள்ளதாகவும் கூறினர்.

யாழ். மாநகரசபை அங்கத்தவர் ஹாஜி வி. எம். எம். அபுசாலி பேசுகையில் திரு. சாமின் சேவைகள் என்றும் மறக்கமுடியாதவை என்றும் அவரது பிரிவு பெரும் வேதனையைக் கொடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டார். வேறும் பலரும் உரை நிகழ்த்தினர்.

யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர்கள், வழக்கறிஞர் எம். பி. க்கள், வர்த்தகர்கள் உட்படப் பலர் தமது இறுதி மரியாதையைச் செலுத்துமுகமாக வில்லூன்றி மயானத்துக்கு வந்திருந்தார்கள்.

திரு. சாம்சபாபதியின்சகோதரரான பிஷப் குலேந்திரன் சிதைக்குத் தீவைத்தார்.

நேற்று அன்னருக்கு மரியாதை செலுத்துமுகமாக யாழ்ப்பாண மாநகரசபைக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. யாழ். பொது நூல் நிலயத்தில் வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்டது. யாழ்ப்பாணம் பஜாரிலுள்ள கடைகள் பல பூட்டப்பட்டன.

---

துணிவகைகளை

## சுங்க இலாகாவினர் பரிசோதனை செய்வர்

கொழும்பு, வெள்ளி

துறைமுகத்தில் இறக்கப்படும் துணிவகைகளை நாளை தொடக்டம் சுங்க இலாகாவினர் பரிசோதனை செய்துவருவர். இதற்கான உத்தரவை சுங்க இலாகா பிரதம கலெக்டர் பிறப்பித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் துணிவகைகளின் தரத்தையும் எவ்வளவு தொகை என்பதையும் அறிந்து கண்காணித்து பாதுகாத்துக்கொள்ளவே இப்பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டதாக பிரதம கலெக்டர் தெரிவித்தார்.

சுங்க இலாகாவினர் துறைமுகத்தில் இறக்கப்படும் ஒவ்வொரு துணிவகைப் பெட்டிகளையும் பரிசோதனை செய்வர்.

---

## கென்னடி பற்றிய திரைப்படம்

### யாழ். திறந்த வெளி அரங்கில்

யாழ்ப்பாணம், சனி

அமெரிக்க ஜனாதிபதி கென்னடி ஞாபகார்த்த திரைப்பட பொதுமன்றமொன்று யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் வரும் 18-ந் திகதி நடைபெறும்.

அமெரிக்க தகவல் பகுதியினரால் ஏற்பாடு செய்துள்ள இத்திரைப்படக் காட்சியில் அமெரிக்காவின் 35-வது ஜனாதிபதியான கென்னடியின் அரசியல்வாழ்வு ஆரம்பம், வெள்ளை மாளிகையில் அவரது முதலாவது வருட வாழ்க்கை ஆகியனவும் சமாதானவாழ்வில் அவரது ஈடுபாடுகளும் தற்போதுள்ள ஜனாதிபதி திரு லிண்டன் ஜோன்சன் பற்றிய காட்சிகளும் காண்பிக்கப்படும்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க தகவல் சேவை நிலயத்தில் நாளை இத்திரைப் படக்காட்சிகள் காண்பிக்கப்படும். வரும் 19-ந் திகதி யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்திலும் 22-ந் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்திலும் இத்திரைப் படக்காட்சிகள் இலவசமாகக் காண்பிக்கப்படும்.

---

## சயிக்கிள் டயர் இறக்குமதி

கொழும்பு, வெள்ளி

சைக்கிள் டயர் இறக்குமதி செய்ய ஒரு கிழமைக்குள் விண்ணப்பிக்கும்படி இறக்குமதி கட்டுப்பாட்டு இலாகா எல்லா சைக்கிள் டயர் இறக்குமதியாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தி பற்றாக்குறை காரணமாக, கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்கள் மட்டுமே ஏக இறக்குமதியாளராக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நாடு முழுவதற்கும் தேவையான டயர்களை உள்நாட்டு உற்பத்தியாளர்கள் வழங்க முடியாத காரணத்தால் தனிப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு டயர்கள் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

---

## 'புரியும் மொழியில் எழுதுக'

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபையின் உபதலைவர் திரு. வே. நாகநாதன் மோட்டார் வாகனங்களின் பதிவு காரியஸ்தரிடமிருந்து தமக்கு வந்த தனிச்சிங்களக் கடிதத்தைத் திருப்பி அனுப்பிவைத்துள்ளார்.

தமக்குப் புரிந்துகொள்ளும்படி தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதும்படி அக்கடிதத்துடன் சுறிப்பொன்றையும் அவர் அனுப்பிவைத்துள்ளாராம்.

---

# யுகோ-இலங்கை பண்டமாற்று வர்த்தகஒப்பந்தம்

கொழும்பு, வெள்ளி

யுகோஸ்லேவியாவுடன் ரூ. 133 லட்சம் வரையான பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தமொன்றைஇலங்கை செய்துள்ளது.

இம்மாதம் 5-ந் திகதி கொழும்பில் ஆரம்பமான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இவ்வித ஒப்பந்தம் உருவாகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி இலங்கை யுகோஸ்லேவியாவுக்கு தேயிலை, ரப்பர், தெங்கு பொருள் உட்பட இலங்கையில் தயாரிக்கப்பட்ட சேர்ட்டுகள், மேலங்கிகள் ஆகியவற்றையும், தூரியம், கிளிசரின், விலையுயர்ந்த கற்கள், சவர்க்காரம், அழகு சாதனங்கள், புண்ணாக்கு ஆகியனவும் ஏற்றுமதி செய்யும்.

என்ஜின் எண்ணை, பெட்ரோல், சிமெந்து, சீனி மற்றும் உணவுப் பொருள்கள், மின்சார உபகரணங்கள், தந்திக் கம்பிகள், பாரமான விசேஷ போக்குவரத்து வண்டிகள் ஆகியவற்றை யுகோஸ்லேவியாவிலிருந்து இலங்கை இறக்குமதி செய்யும்.

யுகோஸ்லேவியாவுக்கும் இலங்கைக்குமிடையில் செய்யப்பட்ட அடிப்படை வர்த்தக ஒப்பந்தம் அப்படியே இருக்க பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தம் இதனுடன் சேர்த்துக்கொள்ளப்படும.

உலக சந்தை விலைப்படி இரு நாடுகளுக்குமிடையில் இந்தப் பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும்.

யுகோஸ்லேவியாவிலிருந்து 600 ட்ரூக்டர்களை இங்கு கடனுக்குப் பெறுவதற்காக உணவு மந்திரி பீலிக்ஸ் விரும்பியுள்ளாரென அறியப்படுகிறது.

---

## தேநீர் கொடுக்க மனைவியின் தாமதம்

### கணவன் தற்கொலை

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலையில் இருந்து இரண்டு மைல்களுப்பாலுள்ள துவரங்காடு என்னுமிடத்தில் உள்ள கிணறொன்றில் குதித்து தற்கொலை செய்த முருகேசு செந்திவேலு (32 வயது)என்பவரின் மரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. மரணவிசாரணையின் போது அவரின் மனைவி அவருக்கு தேநீர் கொடுக்கப் பிந்தியதால் தற்கொலை செய்தார் எனத் தெரியப்படுத்தப்பட்டது. காலஞ்சென்றவரின் மனைவி தவமணி (25 வயது), வேலன் கணபதி, வைரவன் குழந்தை ஆகியோர் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். சச்சிதானந்தம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

---

## 6 பேரை யானை கொன்றது

கம்புறுபிட்டியா, வெள்ளி

இரத்தின கற்கள் வேட்டையில் ஈடுபட்டிருந்த ஆறு பேர்களை யானைக்கூட்டமொன்று கொன்று, அவர்களின் சடலங்களை ஆற்றில் தூக்கி எறிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யானைகளின் பிடியிலிருந்து தப்பிய ஒருவர் 48 மணித்தியாலங்களை ஒரு மரத்தில் கழித்தபின் வீடு திரும்பினர்.

---

# இராணுவத்தினர் நடத்தையை கட்டுப்படுத்த கோரிக்கை

## நகரசபை தீர்மானம்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் உள்ள மீனவர்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் இராணுவ வீரர்களது நடவடிக்கைகளை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டுமென இராணுவ மேலதிகாரிகளைக் கோரும் தீர்மானமொன்று பருத்தித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நகரசபையின் தலைவர் திரு ந. நடராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சித்த வைத்தியர்கட்கு வரி விதிப்பது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டு வரி அறவிடுவதைக் கைவிடுவதெனவும் பருத்தித்துறையில் அவுட் ஏஜன்சி ஒன்றை மீண்டும் ஆரம்பித்து நடாத்த வேண்டுமென ரெயில்வே ஜெனரல் மனேஜர், அமைச்சர் ஆகியோரைக் கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## இந்தியா வரும் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டியாக கிடைக்மாட்டாதென்பதை அறிந்தும் தங்கள் வசதிகளைவிட்டு வரமாட்டார்கள். இனியும் இருக்க முடியாது என்ற நிர்ப்பந்தமான சூழ்நிலையில் தான் புறப்பட்டு வருவார்கள்" என்று நந்தா குறிப்பிட்டார்.

இந்திய பார்லிமெண்டில் கிழக்கு பாகிஸ்தான் வகுப்பு கலவர நிலபற்றி நடைபெற்ற விவாதத்தை முடித்து வைத்து திரு. நந்தா பேசுகையில் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வரும் இந்து சிறுபான்மையினருக்கு சட்டத் தடைகளோ வேறு தடைகளோ இருக்கமாட்டாதென்று கூறினர் கஷ்டப்பட்டுவரும் அந்த மக்களுக்கு மேலும் கஷ்டம் கொடுப்பது முறையல்லவென்றும் அவர் சொன்னர்.

இந்தியாவிலுள்ள சிறுபான்மையினர் இந்திய மக்களில் ஒரு பகுதியினர் என்றும் அவர்களுக்கு இதர மக்களுக்குள்ள வசதிகளும் உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளதென்று திரு. நந்தா கூறினர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

மில்க் வைற் நீல சவுக்காரம்
★
சவுக்காரம் வாங்கும் போது மில்க்வைற் நீல சவுக்காரம் என்று கேட்டுவாங்குங்கள்.
இது ஒரு சிறந்த தயாரிப்பு.




மில்க் வைற் நீல சவுக்காரம் ஒன்றே உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.



# "அரபு ஆசிரியர்களுக்கு இன்னும்சம சம்பளம் இல்லை"

அக்கரைப்பற்று, வியாழன் "ஒரே தராதரம் உடையவர்களாக இருந்தபோதிலும் வேதனத்தில் பலத்த பாரபட்சம் இருக்கிறதென்று இலங்கை அரபு ஆசிரியாகள் நீண்ட காலமாக அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதிலும் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை. இதன்பேரில் "கிழக்கிலங்கை அரபு ஆசிரியர் செங்கம்" மூதூர்த் தாகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப் கே. எல். அபதுல்மஜீது தலைமையில் உதவிக் கல்விமந்திரி திரு டி. பி. தென்னக்கூனைப் பேட்டி கண்டு அரபு ஆசிரியர்களிடத்தில் இருந்துவரும் பாரபட்சமான வேதன முறையைத் தெரியப்படுத்தி எல்லா அரபு ஆசிரியர்களுக்கும் சமமான வேதனம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டது.

"தங்களின் கோரிக்கை நியாயமானது. நான் கல்வி மந்திரியின் கவனத்துக்கு கொண்டு வந்து மிகவிரைவில் எல்லா அரபு ஆசிரியர்களுக்கும் சமமான சம்பளம் வழங்குவதற்கான திட்டம் அமுல் செய்யப்படுமென்றும் அவர் வாக்குறுதியளித்தார் இதுவரை அந்த வாக்குறுதி வெறும் வாக்குறுதியாகவே இருக்கிறதென்று 'கிழக்கிலங்கை அரபு ஆசிரிய சங்கத்தின்' பொதுச் செயலாளர் ஜனுப் எஸ் வி ஏ. நஜூல் மௌலவி ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:-

22-11-63-ல் பாராளுமன்றத்தில் மூதூர்த் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப் எம். ஈ. எச். முகமதலி, கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லையிடம் அரபு ஆசிரியர்களுக்கிடையில் இருக்கும் பாரபட்சமான வேதன முறையை நீக்கி சமமான வேதனமுறை அமுல் செய்யப்படவேண்டுமென்று குறிப்பிட்டபோது கல்வி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. டி. பி. தென்னக்கூன் பதில் அளிக்கையில் இலங்கை அரபு ஆசிரியர்களுக்கு சமமான வேதனம் வழங்குவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு கல்விமந்திரி திரு பி.பி ஜி. கலுகல்லை திறைசேரிக்கு அதிகாரம் அளித்துள்ளார் என்று பதில் அளிககப்பட்டது. ஆனல் இதுவரைக்கும் எந்தவிதமான பதிலும் கிடைத்ததாக இல்லை.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

#### சனி 15-2-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 சைவசிந்தனை, 7-15 வாய்ப்பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 தேர்ந்த இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இவ்வார நிகழ்ச்சிகள், 7-00 சங்கீதநாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 பேச்சு, 8-30 இஸ்லாமியகீதங்கள், 8-45 ஹிந்துஸ்தான் சங்கீதம், 9-15 பேச்சு (தமிழ் இலக்கியம்), 9-30 வயலின், 10-00 நேயர்விரும்பம்.

#### ஞாயிறு 16-2-64

காலை 6-45 உதயகீதம், 6-55 கத்தோலிக்கசிந்தனை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்த போதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 கீதாஞ்சலி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 திரை இசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 பெண்கள் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வாய்ப்பாட்டு, 5-45 சித்திரகானம், 6-10 சங்கீதம்.

இரவு 6-45 வாய்ப்பாட்டு, 7-15 வீணை, 7-45 நாடகம் (தாய்க்குப் பின் தாரம்), 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 மாணவர்மன்றம், 8-30 நிகழ்ச்சி: கனித்த இன்பம், 9-15 பெண்கள்விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலையஒலிப் பதிவுகள்.

### திருச்சி

#### சனி 15-2-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்தியஇசை, 7-30 துதிப் பாடல்கள்.

பகல் 1-00 பிள்ளைக்கனியமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 வாய்ப் பாட்டு.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்தியஇசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 8-00 வாய்ப்பாட்டு, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-30 ஆங்கிலத்தில் செய்தி, 9-05 பேச்சு, 9 25 துதிப்பாடல், 9-30 அகில்பாரத சங்கீத நிகழ்ச்சி.

---

## அலங்கார உற்சவம்

தெல்லிப்பழை, வெள்ளி

தெல்லிப்பழை ஸ்ரீ செல்லப் பிள்ளையார் ஸ்ரீ ஞானவைரவ சுவாமி கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ காளிதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவ சுவாமிக்கு வரும் 19-ந் திகதி புதன் கிழமை தொடக்கம் பகல் விசேஷ அபிஷேக ஆராதனையும் இரவு உற்சவமும் நடைபெறும்.

பகலில் ஸ்ரீ செல்லப்பிள்ளையார் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி உற்சவம் இடம் பெறும்.

புதன்கிழமை ஆரம்பமாகும் உற்சவம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும் தீர்த்தோற்சவத்துடனும் அன்று இரவு நடைபெறும் திருஊஞ்சல் உற்சவத்துடனும் பூர்த்தியடையும்.

---

## சங்கானையில் ஐ. மாகாண வங்கி கிளை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண ஐக்கிய மாகாண வங்கியின் சங்கானைக் கிளைக் காரியாலயத் திறப்புவிழா வரும் 22-ந் திகதி முற்பகல் 10-30 க்கு திறந்து வைக்கப்படவிருக்கிறது.

வடபகுதி கூட்டுறவு மேற்பார்வைச் சபைத்தலைவர் திரு. வி. வீரசிங்கம் ஜே. பி. இக் காரியாலயத்தைத் திறந்து வைப்பாரென அறிவிக்கப் பட்டுள்ளது.

---

## கார் திருடர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

கொழும்பு, வெள்ளி

கார் களவு போன வழக்கு சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த வீ. ஜெகநாதன் என்பவர், கொழும்பு மேலதிக நீதிபதி திரு. ஜி. சேனதிராசா முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டார்.

ஜம்பட்டா தெருவிலுள்ள ஒரு தேநீர் கடையில் பொலிசார் அவரைக் கைதுசெய்தார்கள். தான் குற்றவாளி என்பதை அவர் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இம் மாதம் 20-ம் திகதிவரை விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

# டாக்டர்கள் தனிப்பட்டமுறையில் தொழில் நடத்தத் தடை ?

## சுகாதார மந்திரி நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவதைமுற்றாக ஒழித்துவிடுமாறு தாம்அரசாங்கத்திடம் சிபார்சு செய்யப்போவதாக சுகாதார மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக சுகாதார மந்திரியின் மகஜர் திறைசேரிக்கும் பின்னர் அரசாங்கத்துக்கும் இம்மாத முடிவுக்குள் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவது சம்பந்தப்பட்ட மகஜரொன்றை மந்திரி நேற்று தமது நிரந்தரக்காரியதரிசியிடமிருந்து பெற்றார். இந்த மகஜரில் சில திருத்தங்கள் செய்யப்படவிருப்பதாக அறியப்படுகிறது. இந்தத் திருத்தங்களை மந்திரி தாமாகவே செய்யவிருக்கிறார்.

இந்தப் பிரச்னையை மக்கள் நலன் கருதி தீர்த்து வைப்பதில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளதாகவும் தமது தீர்மானம குறித்துத் தம்மை யாரும் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாதென்றும் மந்திரி எடுத்துக் கூறியுள்ளார்.

அரசாங்கசேவையில் 1154 டாக்டர்களும் 204 வைத்திய நிபுணர்களும் இருப்பதாகவும் இவர்களுக்கு பென்சனில் சேர்த்துக்கொள்ளாத சம்பளப் படி வழங்கப்படுவதாகவும் மிகுதியான 81 வைத்திய நிபுணர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தி வருவதாகவும் 1962-ம் வருடத்திய மந்திரிசபை முடிவை அமுல் நடத்துமாறு இவர்கள் தான் அரசாங்கத்தை வற்புறுத்தி எச்சரிக்கை செய்துவருவதாகவும் மந்திரி தெரிவித்துள்ளார்.

---

## கைத்தொழில் சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரு. 500 பெறும் டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 09 R 0240 | 07 U 0225 |
| 01 L 0162 | 14 K 0848 |
| 12 E 0957 | 04 D 0341 |
| 05 S 0023 | 15 G 0622 |
| 01 V 0703 | 14 W 0431 |
| 10 G 0856 | 13 Y 0423 |
| 10 W 0551 | 06 J 0902 |
| 17 P 0859 | 17 X 0489 |
| 11 D 0909 | 03 Z 0316 |
| 06 Y 0981 | 08 Q 0453 |
| 09 P 0845 | 09 N 0510 |
| 15 P 0494 | 16 T 0089 |
| 13 F 0256 | 06 K 0308 |
| 12 X 0393 | 02 Z 0264 |
| 07 Q 0829 | 05 J 0727 |
| 07 C 0531 | 17 Z 0463 |
| 05 E 0341 | 10 Z 0415 |
| 12 D 0937 | 10 Z 0731 |
| 01 Q 0877 | 12 J 0072 |
| 12 H 0065 | 07 U 0734 |
| 11 K 0416 | 13 E 0892 |
| 03 R 0249 | 16 H 0180 |
| 05 I 0816 | 15 X 0478 |
| 16 W 0078 | 14 E 0747 |
| 08 G 0703 | 17 A 0698 |
| 11 V 0665 | 09 G 0246 |
| 02 Y 0763 | 11 L 0519 |
| 12 C 0256 | 06 V 0236 |
| 17 H 0656 | 08 N 0306 |
| 16 Z 0643 | 05 Y 0901 |
| 12 N 0564 | 05 L 0609 |
| 14 W 0919 | 12 L 0659 |
| 11 Z 0984 | 07 H 0592 |
| 15 Y 0023 | 05 L 0061 |
| 18 Q 0887 | 10 C 0565 |
| 04 J 0276 | [illegible] R 0914 |
| 07 Y 0539 | 17 J 0439 |
| 04 F 0275 | 09 Z 0825 |
| 12 L 0772 | 03 P 0840 |
| 08 Z 0696 | 05 S 0320 |
| 03 Q 0101 | 02 Y 0753 |
| 08 F 0073 | 07 V 089[illegible] |
| 12 C 0953 | 13 G 0357 |
| 08 I 0287 | 14 A 0829 |
| 11 M 0289 | 07 H 0298 |
| 16 E 0033 | 16 G 0492 |
| 10 V 0755 | 17 Y 0534 |
| 09 J 0744 | 03 Z 0230 |
| 15 I 0806 | 13 D 0396 |
| 14 D 0826 | 13 N 0204 |

தலா ரூபா 250 பெறும் டிக்கெட்டுகள்!

| | |
|---|---|
| 14 A 0860 | 14 M 0860 |
| 14 B 0860 | 14 N 0860 |
| 14 C 0860 | 14 P 0860 |
| 14 D 0860 | 14 Q 0860 |
| 14 E 0860 | 14 R 0860 |
| 14 F 0860 | 14 S 0860 |
| 14 G 0860 | 14 T 0860 |
| 14 H 0860 | 14 U 0860 |
| 14 I 0860 | 14 V 0860 |
| 14 J 0860 | 14 X 0860 |
| 14 K 0860 | 14 Y 0860 |
| 14 L 0860 | 14 Z 0860 |

---

## கயரோக நிவாரண சங்கக் கூட்டம்

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டமும் விசேட விழாவும் நாளை பிற்பகல் மானிப்பாய் ஆங்கில மெமோரியல் பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. அன்று விசேஷ மலரொன்றும் வெளியிடப்பட இருக்கின்றது. விழாவில் சமூகஜோதி சி. தியாகராசா உட்படப் பலர் பங்கு பற்றவிருக்கின்றார்கள். இதற்கான சகல ஏற்பாடுகளையும் சங்கச் செயலாளர் கவனித்து வருகிறார்.

---

## ஜ...றன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய ஹைகமிஷன் காட்டிய செய்திப் படங்களைப் பல மக்களும் இரவு வெகுநேரம் வரை இருந்து பார்த்தனர். இந்தியா செல்வது குதிரைக் கொம்பாக இருப்பதால், இப் படங்களையாவது பார்க்க இங்கு பலருக்கும் அதிக ஆவல்.

* * *

திருஷ்டிபரிகாரம் போல் ஒரேயொரு குறை. தலைமை வகித்த ராஜ்குமார் தமிழராதலால் அவருக்கு தமிழிலேயே வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்திருக்கலாம். இனி இவ்வித தவறு நடைபெறுதெனறே நம்புகிறேன்,

* * *

நற்பதத்தார் நற்பதமே
ஞானமூர்த்தி
நலஞ்சுடரே நாலுவேதத்
தப்பால் நின்ற,
சொற்பதத்தார் சொற்
பதமுங் கடந்துநின்ற
சொலற்கரிய சூழலாய்
இதுவுன் தன்மை,
நிற்பதொத்து நிலையிலா
நெஞ்சந் தன்னுள்
நில்லாத புலாலுடம்பே
புகுந்து நின்ற,
கற்பகமே யானுன்னை
விடுவேனல்லேன்
கனகமா மணிநிறத்தெங்
கடவுளானே

— திருநாவுக்கரசர்.

---

## உதைபந்தாட்டப் போட்டி

### மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் இலங்கைச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டியை எதிர்த்து திருகோணமலைக் கோஷ்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை போட்டியிடுவதாக அறிவிக்கப் பட்டிருந்ததெனினும் ரம்ழான் பண்டிகை காரணமாக அது மீண்டும் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. இம்மாதம் 4-ந் திகதி நடைபெறவிருந்த இப் போட்டி துக்கதினம் காரணமாக அன்று நடத்தப் படாமல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருப்பதாக உதைபந்தாட்டச் சங்க அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

யாழ்ப்பாணக் கோஷ்டி வீரர்களின் விபரம் வருமாறு:

அல்போன்ஸ் (காப்டன்), பரமலிங்கம் (உதவி காப்டன்), மகாலிங்கம், கணேசலிங்கம், அன்ரனி மரியநாயகம், தேவராசா, சேவியர், தனபால், மயில்வேறும்பெருமான், குணானந்தன், ஏகாம்பரம், சூசைப்பிள்ளை, யூசியஸ், நேசராசா.


நிறுத்துங்கள்!



தரம் குறைந்த மைகளினால் உங்கள் பேனாவை துஷ்பிரயோகம் செய்வதை நிறுத்துங்கள்- பார்க்கர் சுப்பர் குயிங்க் பாவியுங்கள். இதில் பேனாவை பாதுகாக்கும் சொல்வ X உண்டு. சுப்பர் குயிங்க் புதிய பேனாக்களைப் புத்துணர்ச்சிபூட்டும், பழைய பேனாக்களை புதிய பேனாக்களைப் போல மீண்டும் எழுதவும் உதவி செய்கின்றது.

இது ஒரு பார்க்கர் பேனா கம்பனியின் உற்பத்தி

உலகெங்கும் அதிகமாக நாடும் பேனாக்கள் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்



**School of Technology**
**JAFFNA**

**Radio Servicing Theory**

Course preparing for City & Guilds of London Institute Examination in "May 1965 - commences March 2, 1964. Candidates must have reached G. C. E standard in English, Mathematics and Physics.

Apply immediately to:
Director.


## வரி விளம்பரம்


### தேவை

ஹரிசன் லிஸ்டர் மின்சார இயந்திரங்களை இயக்குவதில் தேர்ச்சி பெற்றுள்ள, தச்சுவேலை, மின்சார வேலைகள் தெரிந்த ஒருவர் தேவை. சில்லறை வேலைகளும் செய்ய தயாராக இருக்கவேண்டும். பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தராதரப் பத்திரம், நற்சாட்சிப் பத்திரப் பிரதிகளுடன் காரியதரிசி, கூட்டுறவு ஆஸ்பத்திரி, மூளாய் என்ற விலாசத்துக்கு 29-2-64 க்கு முன் மனுச்செய்க. 1958

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பிரபலங்கள் அடங்கிய கற்றைக்கோக் திறைம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணநாதர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்


## கோவிலைத் திருத்த சத்தியாக்கிரகம்

சுழிபுரம், வெள்ளி

மூளாய் பிள்ளையார் கோவில் கட்டடத்தைத் திருத்தம் செய்ய தடைகள் சில ஏற்பட்டதால், அத்தடையை நீக்குவதற்காக சுழிபுரம் பெரிய தபாற்கந்தோரில் அதிபராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு. இ. தம்பையா கோவில் வாசலில் இருந்து, இன்று விடியற்காலை 5 மணி தொடக்கமாக, கோவிலில் எக்காரியமும் நடைபெறாது தடுத்து சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கியுள்ளார். தடையாக இருப்பவர்கள் மனம் திரும்பி, கட்டிடம் கட்டுவதற்கும் வேலைகள் செவ்வனே செய்வதற்கும் வழி கிடைக்கும் வரை தாம் கோவில் வாசலில் சத்தியாக்கிரகம் இருக்கப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் உபயோக மசோதா பற்றி ஆலோசனை

கொழும்பு, வெள்ளி
உத்தியோக மொழிச்சட்டத்துக்கு பாதகமேற்படாதவகையில் தமிழ்மொழி உபயோக சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமாக அரசாங்கம் ஆலோசனை செய்துவருவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதேசமயம் மாவட்டசபைகள் அமைப்பதற்கான மசோதாவையும் விரைவில் கொண்டுவருவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்துவருவதாகவும் மாவட்ட சபைகள் அமைக்கப்பட்ட பின்பே தமிழ்மொழி உபயோகச் சட்டத்தை சுலபமாக அமுல் நடத்த முடியுமென்றும் கருதுவதாகத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக மந்திரிகளுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் அறியப்படுகிறது

## சிறைச்சாலையில் கைதிகள் புகைக்கலாம்

கொழும்பு, வெள்ளி
சிறைச்சாலை நிர்வாகம் பற்றி ஆலோசிப்பதற்காக நிதிமந்திரியின் பாராளுமன்ற காரியதரிசி திரு. பி. பி. விக்கிரமசூரியா, சிறைச்சாலை உத்தியோகத்தர்களையும், பல்வேறு நல்விருத்தி சங்க அங்கத்தவர்களையும் சந்தித்தார்.

சிறைச்சாலைக்குள் கைதிகள் புகை பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. சிறைச்சாலையில் வேலை செய்து பெறும் பணத்தின் மூலம் கைதிகள் சிகரெட் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி
வருகிற 16-2-64 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் இடையே நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டி மறுபடியும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ரம்ழான் பெருநாளை முன்னிட்டு திருமலையில் சில ஆட்டக்காரர்களுக்கு விரதமனுட்டிப்பதற்கு வசதி செய்யவே உதைபந்தாட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. 1-3-64-ல் யாழ்ப்பாணத்தில் ஆட்டம் நடைபெறும்.

## சீனப் பிரதமரின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பர நலன்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் அவர் மேலும் கூறினர்.

இலங்கையில் சீனவுக்குத் தளம் கொடுக்கவிருப்பதாகக் கூறப்படுவது பொய் என்றும் அவர் கூறினர்.

பார்லிமெண்ட் பிப்ரவரி 25ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

## கடைசிநாள சாட்சியம்

கொள்ளுப்பிட்டி, வெள்ளி
'டெயிலி மிறர்' 'சிலோன் ஒப்சேவர்' ஆகிய இருபத்திரிகைகளையும் அரசாங்கம் எடுத்து 'சிறிலங்கா' பத்திரிகையைப் போல நடத்த வேண்டுமென்று இன்று பத்திரிகைக் கமிஷன் முன் பௌத்த ஜாதிக பலவேகயாவின் தலைவர் திரு. மெத்தானந்தா தெரிவித்தார்.

இப்பத்திரிகைகளின் போக்கு நாட்டுக்கு உதவாதெனவும் அவர் குறிப்பிட்டார். பௌத்த ஜாதிக பலவேகயா இன்றுடன் தனது சாட்சியத்தை முடித்துக் கொண்டது.

# குடியேற்ற வாசிகளின் கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், சனி
முரசுமோட்டை குடியேற்ற வாசிகளின் குடியிருப்பு நிலத்தில் மாரிகாலத்தில் வெள்ளம் தேங்கிவிடுவதால் அங்கு அவர்கள் வசிக்க முடியாதிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டபொழுது இக்காலங்களில் ஏற்படும் கஷ்டங்களைத் தவிர்க்குமுகமாக ஒரு பெரிய மண்டபத்தை கட்டுவதற்கு அரசாங்கத்துடன் தாம் ஆலோசித்து வருவதாகவும் இதற்கு குடியேற்றவாசிகள் நிதி உதவி செய்யவேண்டுமெனவும் யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

முரசுமோட்டைக் குடியேற்ற வாசிகளின் சார்பில் விவசாய முன்னேற்றக் கழகத்தாது கோஷ்டினர் கழகத் தலைவர் திரு. வ. சண்முகராசா தலைமையில் உதவி அரசாங்க அதிபரைப் பேட்டி கண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முரசுமோட்டைக் குடியேற்ற வாசிகளுடைய வீட்டு நிலத்துக்கு தண்ணீர் எடுத்ததற்காக அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கை ரத்து செய்யும்படி கோரிக்கைவிடப்பட்டபோது அதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லையென்றும் சட்டத்துக்கு அமையாத எதையும் தாம் செய்யமுடியாது என்றும் உதவி அரசாங்க அதிபர் பதிலளித்தார்.

முரசுமோட்டை காரச்சி ஆகிய பகுதிகளிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு எதிர்வரும் சிறுபோகத்திற்கு தண்ணீர் விநியோகம் கூடுதலாக்கப்படவேண்டுமென்றும் தற்போதைய தண்ணீர் விநியோகத் திட்டம் கூடுதலான நிலவசதியுள்ளவர்களுக்கே அதிக வசதியளிக்கிறதென்றும் உதவி அரசாங்க அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டபோது அவர்களின் கோரிக்கை (அதிக தண்ணீர் விநியோகம்) இப்போதுள்ள நிலையில் சாத்தியப்படாதென்றும் தெரிவித்தார்.

## வருடாந்தக் கூட்டம் ஒத்திவைப்பு

இலங்கைக் கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வலிகாமம் மேற்குக் கிளைச் சங்கம் 15-2-64 சனி பி. ப. 4-30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் நடாத்தவிருந்த வருடாந்தக் கூட்டம சடுதியாய் பிற்போடப்படுவதை அங்கத்தவர்க்கும்மற்றையோர்க்கும் இத்தால் அறிவிக்கிறேன். பின் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும்.

டாக்டர் எச். பி. செல்லையா,
தலைவர்.
"ரோஸ்வில்லா"
மானிப்பாய்,
14-2-64

## மரண அறிவித்தல்

### ரோசம்மா

காங்கேசன்துறை வைத்தியசாலையில் வேலைசெய்யும் பத்திநாதனுடைய தாயார் பரமபதம் அடைந்து விட்டார். பூதவுடல் வலித்தூண்டல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இ. செல்லத்துரை, யாழ். வைத்தியசாலை.

## அதிக கருவாடு

கொள்ளுப்பிட்டி, வெள்ளி
எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஒவ்வொரு கூப்பனுக்கும் 1/2 ரூத்தல் மாசிக் கருவாடு வழங்கப்படும். என அறிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு கடற்கரை வரை இராணுவ முகாம்கள்

## சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி
சட்டவிரோதக குடியேற்றத்தைத் தடுக்கவும் கள்ளக்கடத்தலை நிறுத்தவும் நீர்கொழும்பிலிருந்து முல்லைத்தீவுவரை கரையோரப்பகுதிகளில் இராணுவப் பாதுகாப்பு நிலையங்கள் அமைப்பதென்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

கரையோரப்பகுதிகளில் இராணுவமுகாம்கள் அமைப்பது சம்பந்தமாக இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸ், இராணுவ முகாம்களை நீர்கொழும்பு தொடக்கம் முல்லைத்தீவுவரை கரையோரப் பகுதிகளில் அமைப்பது சம்பந்தமான விபரங்களை அப்பகுதி அரசாங்க அதிபர்களுக்குத் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

மன்னர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கரையோரப்பகுதிகளில் ஏற்கனவே இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தேடுதல் வெளிச்சமும் நிறுவப்பட்டுள்ளன.

காஷ்மீர்

# பிரிட்டிஷ் போக்குக்கு 51 காங்கிரஸ் எம். பி.க்கள் கண்டனம்

புதுடில்லி, பெப். 14
காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டி இன்று கூடிய போது பாதுகாப்புச்சபையில் காஷ்மீர் சம்பந்தமாக பிரிட்டன் கைக்கொண்ட நிலைபற்றிப் பல அங்கத்தினர்கள் கவலை தெரிவித்தனர். 51 காங்கிரஸ் எம். பி. க்கள் பிரிட்டனின் செயலை குறை கூறியிருக்கின்றனர்.

காஷ்மீரில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு விலக வேண்டும் என்ற பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தைத் தவிர, வேறு எந்தத் தீர்மானத்தையும் இந்தியா ஒப்புக் கொண்டதில்லை என திரு. வி. கே கிருஷ்ணமேனன் இன்று பார்லிமெண்டில் பேசும் போது கூறினர்.

1947-ம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை பிரிட்டன் மீறிவிட்டதென்றும் அவர் குற்றஞ்சாட்டினர். பாதுகாப்பு சபையில் பிரிட்டன் நடந்து கொண்டமுறை பற்றியே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

காஷ்மீரின் வெளி உறவுக் கொள்கை இந்தியாவைப் பொறுத்தது என ஐ. நா.வில் அமெரிக்கப்பிரதிநிதி ஒப்புக் கொண்டிருந்தார். சட்டப்படி இந்தியாவுடன் காஷ்மீர் இணைப்பு செல்லும் என ஐ. நா. கமிஷன் சட்ட ஆலோசகர்கள் தீர்ப்பளித்திருக்க, பிரிட்டனின் நிலை, ஐ. நா. நிலையை தெளிவாக மீறியதாய் இருக்கிறது" என்றும் மேனன் கூறினர்.

பாகிஸ்தான், காஷ்மீர் பிரச்னையை பாதுகாப்பு சபைக்குக் கொண்டு செல்லும் ஒவ்வொரு சமயத்திலும், மேற்கு லங்க எல்லையில் அது நெருக்கடியைச் சிருஷ்டிக்கிறது என்றும் அவர் கூறினர்.

## சூ-என்-லாயின்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
உத்தியோகத்தர் கூறியிருப்பதாக தான் அறிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். ரஷ்யா, சீன போன்ற மற்ற நாடுகளுக்கு நல்லெண்ண விஜயம் செய்யும் இலங்கையர் ஏன் அயல்நாடான இந்தியாவுக்கு செல்லக் கூடாதெனவும் திரு. ஜே. ஆர்; வினவினர்.

இதுபற்றித்தமக்குத் தெரியாதெனவும், என்னுல் இயன்றவரை அவ்விதம் நடைபெறுமல் இருக்கத்தான் பார்த்துக் கொளவதாகவும் திரு பீலிக்ஸ் தெரிவித்தார்.

## அங்கீகாரம் ஒத்திவைப்பு

கொள்ளுப்பிட்டி, வெள்ளி
பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கான தலைமை பேராசிரியர்கள பதவிகளுக்கான அங்கீகாரங்கள் ஒத்திப்போடப்பட்டுள்ளன. பொருளாதாரம், இரசாயனம், பௌத்தம் விவசாயம் ஆகிய துறைகளுக்கு பல்கலைக்கழக சவுன்சில் சிபார்சுசெய்தவர்களின் பெயர்களை அங்கீகரிப்பதை அடுத்தமாதம் 2-ம் திகதிவரை ஒத்திப்போட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதாரத்துறைப் பேராசிரியர் நியமனத்தை ஆட்சேபித்தே திரு. எப். ஆர். ஜெயசூரியா உண்ணுவிரதமிருந்துவருகிறர்.

## புதிய வைத்தியசாலை திறப்புவிழா

யாழ்ப்பாணம், சனி
மயிலிட்டி கிராமசபையைச் சேர்ந்த கட்டுவன் கிராமம் 18-ம் வட்டாரத்தில் ஓர் வைத்தியசாலை இன்று திறக்கப்படவிருக்கின்றது. வடமாகாண சுகாதார அத்தியட்ஷகர் டாக்டர் நதானியல் மேற்படி வைத்தியசாலையைத் திறந்துவைப்பார்.

## ஆஸ்பத்திரியில் தேநீர் விடுதி

திருக்கோணமலை, வெள்ளி
திருக்கோணமலை ஆஸ்பத்திரியில் தேநீர் விடுதி ஒன்று நிறுவித்தருமாறு கோரும் தீர்மானமொன்றை அகில இலங்கை சுகாதார தொழிலாளர் சங்கத் திருமலைக் கிளை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. கூட்டத்திற்கு திரு. எச் டி. ஜயசேகரா தலைமைதாங்கினர்.

## இலங்கை-இந்தியர் சங்கம்

யாழ்ப்பாண இலங்கை—இந்தியர் சங்க ஆண்டு விழா பற்றி நேற்று வெளியான செய்தியில் காரியதரிசியின் பெயர் திரு. ரங்கசாமிபிள்ளை என்பதற்கு பதில் திரு. வெங்கடசாமி என்றிருக்க வேண்டும். அக்கூட்டத்தில் திருவாளர்கள் சக்கரை, சங்கரையா இவர்களும் பேசினர்.

## அங்கீகாரம் பற்றி மே. ஜெர்மன் உதவி பிரதமர்

கொழும்பு, வெள்ளி
ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வர்த்தகக் கமிஷனை கான்சலேட் அந்தஸ்துக்கு உயர்த்துவதில் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை உண்மைத்தன்மை வாய்ந்தது என ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவி பிரதமர் திரு. புருனே வியூஷர் தெரிவித்துள்ளார்.


3-வது மகத்தான வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) — பிள்ளா (வெள்ளவத்தை)
விஜயா (மட்டக்களப்பு) — ஸ்ரீகிருஷ்ண (திருமலை) — மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி
எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி பி. எஸ். சரோஜா, சம்பந்தம்
மற்றும் பலர் நடிக்கும்



மொடர்ன் தியேட்டர்ஸ்
காட்டு ரோஜா
இசை: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — அஞ்சலிதேவி நடித்த
சர்வாதிகாரி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது